சுருக்கம்

கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.ஜெ.வெங்கடேசன், (த/பெ.(லேட்) திரு.சி.ஜெகதீசன்) – தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை

அரசாணை (3ப) எண் :6

நாள்: 07.02.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி, தை–24

படிக்க:

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.31143/நிபி8/1/ 2016, நாள் 20.07.2018

-----

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.சி.ஜெகதீசன், என்பவர் 02.01.2012 அன்று இறந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 01.07.1957 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.07.2015 என்றும், இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.ஜெ.வெங்கடேசன் என்பவர் தனக்குப் பணிநியமனம் வேண்டி 31.01.2013 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 18.05.1982 என்றும், திரு.ஜெ.வெங்கடேசன் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி தனியர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தில் தட்டச்சராக 17.04.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், தனியருக்கு தட்டச்சர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 17.04.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு இயக்குநர், மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்ககம் அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று திரு.ஜெ.வெங்கடேசன், என்பவரது பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சர் பணியிடத்தில் சேர்ந்த நாளான 17.04.2017 முற்பகல் முதல், வரன் முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.20960/க்யூ1/18–1, நாள்.24.01.2019 மற்றும் பணியாளர் மற்றும்

நிருவாகச் சீர்த்திருத்தத்(ஜி2)துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.2622/ஜி2/2019, நாள்.01.02.2019 –இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–06.
திரு.ஜெ.வெங்கடேசன், தட்டச்சர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18.
<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14.2.19
பிரிவு அலுவலர்.
12/2/19